14.02.2025

SC.301/2022

Accused A1,A2,Apresent.

PW - 2 அர்ஜுணன் த/பெ. தாவான்

**சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

என்னிடம் அலைபேசி இல்லை. என் மனைவி மற்றும் மகளிடமும் அலைபேசி இல்லை. இறந்துபோன பிச்சை, சாட்சி அசா1 சந்திரசேகரின் அ லைபேசி எண்ணும் எனக்கு தெரியாது. நான் இருந்ததாக சொல்லும் செங்கல்சூளைக்கும் பிச்சை வீட்டிற்கும் 1 1/2 கிமீ தூரம் இருக்கும். சம்பவத்திற்கு முன்பும் பின்பும் சம்பவத்தின்போதும் நான் அசா1 சந்திரசேகரனை பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் நான் 1, 2 எதிரிகளை பார்க்கவில்லை. என் மனைவி புஸ்பவல்லியையும் எங்களையும் ஒன்றும் மிரட்டவேண்டாம் என்று சொன்தற்கு என் மனைவியை ரமேஷ்அடித்து கீழே தள்ளிவிட்டார் எ ன்றும் என் மனைவி மயக்கம் அடைந்துவிட்டதால் நான் அவரை தூக்கிக்கொண்டுபோய் அங்கேயே இருந்த கொட்டகையில் போட்டேன் என்றும் நான் அவருக்கு தண்ணிர் கொடுத்துக்கொண்டிருந்தேன் என்றும் நானும் என் மனைவியும் அங்கு சத்தம் கேட்டு போய் பார்த்தோம் என்றும் சொங்கல் சூளை ஓனர் வெட்டுப்பட்டு கிடந்தார் என் றும் அதன்பிறகு அவரது மகன் வண்டியில் வைத்து கட்டு கட்டி வருவதற்காக போய்விட்டார் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் போலிசார் சொன்னதன் அடிப்படையில் தான் சொன்னேன்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர். (மு.கூ.பொ)

**14.02.2025**

**SC.301/2022**

**Accused A1, A2, Apresent.**

**PW - 3 புஷ்பவல்லி க/பெ. அர்ஜுணன்**

**சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

சம்பவத்திற்கு முன்பும் பின்பும் சம்பவத்தின்போதும் நான் அசா1 சந்திரசேகரனை பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரிகளையும் சம்பவத்தன்று பார்க்கவில்லை. நான் முதல் விசாரணையில் என்னை ரமேஷ் தள்ளிவிட்டதாகவும் எனக்கு நெஞ்சு அடைத்துவிட்டதாகவும் என்னை தூக்கிக்கொண்டுபோய் கொட்டகையில் வைத்து என் கணவர் தண்ணிர் கொடுத்துக்கொண்டிருந்தார் என்றும் ரமேசின் அம்மா வந்து அவர்களிடம் ஏன் சண்டை போடுகிறாய் என்று சொல்லி ரமேசை அவருடைய வீட்டிற்கு அழைத்துச்சென்றுவிட்டது என்றும் என் மகள் எங்கள் ஓனருக்கு போன் செய்ய சொன்னார் என்றும் நாங்கள் போய் பார்த்தபோது பிச்சை வெட்டுப்பட்டு கிடந்தார் என்றும் பிச்சையை அவரது மகனும், மகனின் மனைவியும் தூக்கி கட்டுபோட்டுக்கொண்டிருந்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சொன்னேன் என்றால் சரிதான்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர். (மு.கூ.பொ)